**சேமிப்புக் கணக்கு**

18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப்பிரஜை மற்றும் செல்லுபடியாகும் அடையாள ஆவணத்தை(தேசிய அடையாள அட்டை,ஓட்டுநர் உரிமம் அல்லது கடவுச்சீட்டு) வைத்திருக்கும் எவரும் சேமிப்புக் கணக்கை ஆரப்பிக்க முடியும்.

குறைந்த வைப்புத்தொகை ரூபா 3,00

வைப்புகள் ரொக்கம்,நேரடி பரிமாற்றங்கள் அல்லது சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி என வரையப்பட்டு குறுக்குக்கோடிடப்பட்ட(கணக்கு கட்டனம் மட்டும்) காசோலை ஆகிய வைப்பு முறைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடவுப்புத்தகம் அல்லது கணக்குக்கூற்றை வாடிக்கையாளர் கோறலாம். தொலைந்து போன கடவுப்புத்தகம் என்றால் திருப்திகரமான விளக்கத்தைப் பெற்றவுடன் புதிற கடவுப்புத்தகம் வழங்கப்படும்.

வட்டி தினந்தோறும் திரட்டப்பட்டு மாதந்தோறும் கணக்கில் வரவு வைக்கப்படும்.

அனைத்து சேமிப்புக் கணக்குதாரர்களுக்கும் வரவு அட்டை (Debit card) வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களின் VISA தானியக்க இயந்திரங்கள மற்றும் POS இயந்திரங்களில் பயன்படுத்தலாம்.

அனைத்து வைப்புதாரர்களுக்கும் Online வங்கிச்சேவை வழங்கப்படும்.

365 நாட்கள் பரிவர்த்தனைகள் இல்லத சேமிப்புக் கணக்குகள் செயலற்றதாக மாற்றப்பட்டு பற்றுகள் மற்றும் வரவுகள் முடக்கப்படும். வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பெயரில் மீண்டும் செயல்படுத்தப்படும். செயலற்ற நிலை 10 ஆண்டுகள் தொடர்ந்தால் அத்தகைய கணக்குகள் 2011 ஆம் ஆண்டின் நிதி வணிகச் சட்ட எண் 42 இன் கீழ் மத்திய வங்கிக்கு தெரிவிக்கப்படும்.

தகுதியான வைப்புகள் ஒரு வைப்பாளருக்கு அதிகபட்ச தொகை ரூபா 1,100,000 வரை இழப்பீட்டுக் காப்புறுதிக்காக நாணய சபையால் செயல்படுத்தப்படும் இலங்கை வைப்புத்தொகை காப்புறுதி திட்டத்தில் காப்பீடு செய்யப்படுகின்றன

கணக்கு மூடப்படும் பட்சத்தில் சேவைக்கட்டணமாக ரூபா 300 நிறுவனத்தால் கழிக்கப்படும்

வாடிக்கையாளர் சேமிப்புக் கணக்குகள் தொடர்பான பரிவர்த்தனைகளை திரும்பப்பெறுமாறு கோறினால் வாடிக்கையாளர் கோறிக்கை மற்றும் தொடர்புடைய ஆதார ஆவணங்களை நாங்கள் சேகரிக்க வேண்டும். மேலும் அந்த கோரிக்கை உயர் அதிகாரியின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

சேமிப்புக் கணக்கைத் திறக்க பின்வரும் ஆவணங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு அருகிலுள்ள கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஆவணங்களை **இங்கே** பதிவிறக்கம் செய்யலாம்.

- தனிப்பட்ட அல்லது கூட்டு வைப்புகள்
  - நிலையான வைப்புப்படிவம்
  - வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC)
  - வெளிநாட்டுக் கணக்கு வரி இணக்கச்சட்ட படிவம் (FATCA)
  - தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிம பிரதி.

- முகவரி உருதிப்படுத்தல் ஆவணப்பிரதி.
- பின் உறித்து அடையாள ஆவணங்கள்

- கார்ப்ரேட் அல்லது பிற நிறுவனங்கள்
    - நிலையான வைப்புப்படிவம்
    - வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC) மற்றும் தேவையான ஆவணங்கள்
    - வெளிநாட்டுக் கணக்கு வரி இணக்கச்சட்ட படிவம் (FATCA)
    - வியாபாரப் பதிவு / ஒருங்கிணைப்புச் சான்றிதழ்
    - சங்கத்தின் கடமைகள் மற்றும் பொறுப்பு உள்ளடங்கள் ஆவணம் (AOA)
    - தீர்மான குழு
    - நன்மைபயக்கும் உரிமையாளரின் அறிவிப்பு
    - நிர்வாகக்குழு அங்கத்தவர்களின் வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC) மற்றும் அடையாள ஆவணங்கள்
    - அங்கிகரிக்கப்பட்டவர்களின் கையொப்பதாரர்களின் கடிதம்.
    - அங்கிகரிக்கப்பட்டவர்களின் கையொப்பதாரர்களின் அடையாள ஆவணங்கள்
    - படிவம் 20
    - படிவம் 13 (தேவைப்பட்டால்)
    - முகவரி உருதிப்படுத்தல் ஆவணங்கள் (பட்டியல் கொடுப்பனவு மசோதா அல்லது நிறுவனத்தின் பெயரில் உள்ள வங்கிக்கணக்குக் கூற்று).

கவர்ச்சிகரமான வட்டி வகிதம் நிறுவனத்தால் வழங்கப்படும். மேலும் வாடிக்கையாளருக்கு அறிவிக்காமல் வட்டி வகிதத்தை மாற்றும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

புகார்கள் அல்லது பரிந்துரைகளை **இங்கே** தெரிவிக்கலாம்

புகார்கள் கையாளுதல் கொள்கைகளை தேவைப்பட்டால் **இங்கே** பதிவிரக்கம் செய்யலாம்.

**முத்து சிறுவர் சேமிப்புக் கணக்கு**

முத்து சிறுவர் சேமிப்புக் கணக்கை பெற்றோர் அல்லது பாதுகாவலர் சிறுவர்களின் பெயரில் (18 வயதிற்குட்பட்ட) திறக்கலாம்

- விண்ணப்பப்படிவத்துடன் சிறுவரின் பிறப்புச்சான்றிதழ் உடன் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை மற்றும் முகவரி உருதிப்படுத்தல் ஆவணம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

- குறைந்த வைப்புத்தொகை ரூபா 3,00

- வைப்புகள் ரொக்கம்,நேரடி பரிமாற்றங்கள் அல்லது சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி என வரையப்பட்டு குறுக்குக்கோடிடப்பட்ட(கணக்கு கட்டனம் மட்டும்) காசோலை ஆகிய வைப்பு முறைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- சிறுவருக்கு 18 வருடங்கள் நிறைவடையும் போது கணக்கு தானாகவே சாதரண கணக்கிற்கு மாற்றப்படும். எவ்வாறாயினும் சிறுவரை ஒரு கிளைக்கு அழைத்து கணக்கு வைத்திருப்பவர் என்பதை உறுதிப்படுத்தி ஆவணங்களை சமர்ப்பிற்கும் வரை சிறுவர் கணக்கில் இருந்து பணத்தை எடுக்க முடியாது. மேலதிகமாக கணக்கு வைத்திருப்பவருக்கு தேவையான ஆவணங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் புதிய சாதரண கணக்கில் இருப்பை தொடர வாய்ப்புண்டு. சுாதாரண சேமிப்புக் கணக்குகளின் கீழ் வகைப்படுத்தப்படும் அனைத்து கணக்குகளுக்கும் நிறுவனத்தின் பொதுவான செயலற்ற கொள்கை பொருந்தும்.

- சிறுவர் 18 வருடங்களை பூர்த்தி அடையும் முன்னர் கணக்கில் மீளப்பெறுதலை மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.
- முத்து சேமிப்புக்கணக்குப் புத்தகம் வழங்கப்படும்.
- வட்டி தினமும் திரட்டப்பட்டு மாதந்தோறும் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- கணக்கு திறக்கப்பட்ட நாளிலிருந்து அறுபது மாதங்கள் ( 5 வருடங்கள்) முடிந்ததும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் விருப்பப்படி சிறுவரால் பராமறிக்கப்படும் ஒரு சேமிப்புக் கணக்கிற்கு மீதியை மாற்றலாம்.
- தகுதியான வைப்புகள் ஒரு வைப்பாளருக்கு அதிகபட்ச தொகை ரூபா 1,100,000 வரை இழப்பீட்டுக் காப்புறுதிக்காக நாணய சபையால் செயல்படுத்தப்படும் இலங்கை வைப்புத்தொகை காப்புறுதி திட்டத்தில் காப்பீடு செய்யப்படுகின்றன்
- 18 வயதில் கணக்கை மூடி விட்டால் அல்லது வேறு வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் பராமரிக்கப்படும் கணக்கிற்கு மாற்றப்பட்டால் நிறுவனத்தால் ரூ 300. சேவைக்கட்டணமாக பிடித்தம் செய்யப்படும்.
- எங்களிடம் உள்ள சாதரண கணக்கிற்கு கணக்கு மாற்றப்பட்டால் எந்த சேவைக்கட்டணமும் விதிக்கப்படாது.

சிறுவர் சேமிப்புக் கணக்கைத் திறக்க பின்வரும் ஆவணங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு அருகிலுள்ள கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஆவணங்களை **இங்கே** பதிவிறக்கம் செய்யலாம்.

**முத்து சேமிப்புக் கணக்கு**

- முத்து சேமிப்புக் கணக்கு விண்ணப்பம்
- பிறப்புச்சான்றிதழ் பிரதி - சிறுவர்
- வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC) - பெற்றோர் அல்லது பாதுகாவலர்
- வெளிநாட்டுக் கணக்கு வரி இணக்கச்சட்ட படிவம் (FATCA) - பெற்றோர் அல்லது பாதுகாவலர்.
- தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிம பிரதி. - பெற்றோர் அல்லது பாதுகாவலர்.
- முகவரி உருதிப்படுத்தல் ஆவணப்பிரதி.

கவர்ச்சிகரமான வட்டி வகிதம் நிறுவனத்தால் வழங்கப்படும். மேலும் வாடிக்கையாளருக்கு அறிவிக்காமல் வட்டி வகிதத்தை மாற்றும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

புகார்கள் அல்லது பரிந்துரைகளை **இங்கே** தெரிவிக்கலாம்

புகார்கள் கையாளுதல் கொள்கைகளை தேவைப்பட்டால் **இங்கே** பதிவிரக்கம் செய்யலாம்.